அசல் வழக்கு எண். 87/2014 தேதி. 06.12.2023

வா.சா.1 - வெள்ளையம்மாள்

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அரசு தரப்பினர் என்னை தொல்லை செய்ததால் தாவா வழக்கு தாக்கல் செய்தேன். தாவா வீட்டில் நான் இருக்க கூடாது என பக்கத்து வீட்டை சேர்ந்த தங்கவேல் தொல்லை செய்தார். எனது சித்தப்பா நல்லப்ப ரெட்டியார், மற்றும் தும்மாயி அம்மாள் ஆகியோர் தாவா சொத்தை எனக்கு எழுதிவைத்தனர். தங்கவேல் எனது சித்தப்பாவின் தம்பி மகன். தாவா சொத்தில் தங்கவேல் குடியிருக்கவில்லை. நான் தான் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தின் சர்வே எண் , விஸ்திரணம் மற்றும் நான்கெல்லை விவரம் தெரியாது. தாவா சொத்திற்கு பட்டா என் பெயரில் உள்ளது. பட்டா தாக்கல் செய்துள்ளேன். குளித்தலை வட்டார வளர்ச்சி அலுவலரை எதற்காக தரப்பினராக சேர்த்துள்ளேன் என்று தெரியவில்லை. இனுங்கூர் ஊராட்சி மன்ற செயலாளர் தாவா சொத்தில் என்னை குடியிருக்க சொன்னார்.

2. அரசு தரப்பினர் என்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் தாவா சொத்தில் குடியிருக்க கூடாது என கூறினார்கள். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.-14 வரையான ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நல்லப்ப ரெட்டியார் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் அவருக்கு வாரிசுகள் யாரும் இல்லை. நல்லப்ப ரெட்டியாருக்கு வாரிசு இல்லாததால் தாவா சொத்தை எனக்கு உயில் எழுதி வைத்த விவரத்தை வழக்குரை மற்றும் எனது சாட்சியத்தில் சொல்லியுள்ளேன். அரசு தரப்பினரை தேவையில்லாமல் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளை பொறுத்து தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Principal District Munsif,**
**Kulithalai.**